**பிப்ரவரி – 23**

# TNPSC துளிகள்

- 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி 19 அன்று தமிழ் தாத்தா உ.வே. சாமிநாத அய்யரின் 165-வது பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.
- தமிழ்நாடு முதலமைச்சர் வாழ்வாதார கைத்தறி நிதி விருதுகள், பூம்புகார் மாநில விருதுகள் மற்றும் நிதியியல் விருதுகள் ஆகியவற்றை பட்டு உற்பத்தி செய்யும் 3 விவசாயிகளுக்கு அளித்தார்.
- மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையமானது (UPSC - Union Public Service Commission) 2019 ஆம் ஆண்டில் நடைபெறும் குடிமைப் பணித் தேர்வுகளிலிருந்து மேல்வகுப்பைச் சேர்ந்த ஏழை மக்கள் 10 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அறிவித்துள்ளது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இந்திய அதிகாரியான சந்திரமௌலி இராமநாதனை யுக்திசார் மேலாண்மை, கொள்கை மற்றும் உடன்பாட்டுத் துறையின் (Department of Management Strategy, Policy and Compliance - DMSPC) முக்கியமான பதவிகளில் ஒன்றிற்கு நியமித்துள்ளது.
- சவுதி அரேபியா சர்வதேச சூரியசக்திக் கூட்டிணைவின் (International Solar Alliance - ISA) கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தியா தலைமையிலான இந்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைப்பில் இணையும் 73வது நாடாக சவுதி அரேபியா உருவெடுத்துள்ளது.
    - இதன் மூலம் தற்பொழுது ISA-வில் 122 உறுப்பு நாடுகள் உள்ளன.

# தமிழ்நாடு செய்திகள்

## 110 விதியின் கீழ் அறிவிப்புகள்

- சட்டசபையில் 110 விதியின் கீழ் தமிழக முதல்வர் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.
- கீழ்க்காணும் தலைவர்கள்/ஆளுகைகளுக்கு உருவச் சிலையுடன் கூடிய மணி மண்டபம் மற்றும் நூலகம் அமைத்தல்

| | |
|---|---|
| கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை | தேரூர் - கன்னியாகுமரி மாவட்டம் |
| சர்.ஏ.டி.பன்னீர் செல்வம் | திருச்சி மாவட்டம் |
| வி.கே.பழனிசாமி கவுண்டர் | வேட்டைக்காரன் புதூர் - கோவை மாவட்டம் |
| இரட்டைமலை சீனிவாசன் | கோழியாளம் – மதுராந்தகம் |
| பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அல்லாள இளைய நாயக்கர் | ஜேடர்பாளையம் – நாமக்கல் மாவட்டம் |

- கீழ்க்காணும் தலைவர்கள்/ஆளுகைகளின் உருவச் சிலைகளுக்கு அவர்களது பிறந்த நாளில் அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்தல்
        - சி.பா.ஆதித்தனார்

- ம.பொ.சிவஞானம்

❖ கீழ்க்காணும் தலைவர்கள்/ஆளுகைகளின் தற்போதுள்ள மணி மண்டபத்தைப் புனரமைத்து நூலகம் அமைத்தல்
  - வீரன் சுந்தரலிங்கனார் - தூத்துக்குடி மாவட்டம் சுவர்ணகிரி (ரூ.75 லட்சம்).
  - விடுதலைப் போராட்ட வீரரான ஒண்டிவீரன்- திருநெல்வேலி (ரூ.75 லட்சம்).

❖ மேலும் தமிழக அரசானது முல்லைப் பெரியார் அணையைக் கட்டிய ஜான் பென்னி குய்க்கின் பிறந்தநாளை (ஜனவரி 15) அரசு விழாவாகக் கொண்டாட முடிவு செய்துள்ளது.

## டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு நூலகம்

❖ புதிதாக கட்டப்பட்டுள்ள புரட்சித் தலைவர் பாரத் ரத்னா டாக்டர் எம்ஜிஆர் நூற்றாண்டு நூலகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திறந்து வைத்தார்.

❖ இந்நூலகமானது சென்னை தரமணியில் உள்ள சர்வதேச தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் வளாகத்தில் கட்டப்பட்டுள்ளது.



❖ இதர மொழிகளில் உள்ள சிறந்த இலக்கியங்களை தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பதற்காகவும் ஆராய்ச்சி மேற்கொள்வதற்காகவும் இந்த மையம் அமைக்கப்பட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## ஏரோ இந்தியா 2019

❖ சர்வதேச ஆகாயவெளி மற்றும் பாதுகாப்புக் கண்காட்சியான "ஏரோ இந்தியா–2019" ன் 12வது பதிப்பானது பெங்களூருவின் எலஹங்காவில் தொடங்கி வைக்கப்பட்டது.

❖ இந்த மிகப்பெரும் நிகழ்ச்சியானது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.

❖ "ஏரோ இந்தியா 2019" ஆனது பிப்ரவரி 20 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை 5 நாட்கள் நடத்தப்படவிருக்கிறது. 5 நாட்கள் நடைபெறும் இந்த நிகழ்ச்சியானது ஒவ்வொரு நாளும் ஒரு கருத்துருவைக் கொண்டிருக்கும்.

- இந்த நிகழ்ச்சியின் முதலாவது நாள் தொடக்க விழாவாக இருக்கும்.
- இரண்டாவது நாளின் கருத்துருவானது, "புதிய தொழில் தொடங்குதல்" தினமாக இருக்கும்.
- மூன்றாவது நாளின் கருத்துரு தொழில்நுட்ப தினமாகும்.
- நான்காவது நாளின் கருத்துரு பெண்கள் தினமாகும்.
- ஐந்தாவது நாளின் கருத்துரு பொதுத் தினமாக இருக்கும்.

❖ இந்த நிகழ்ச்சியின்போது பாதுகாப்புத் துறை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் பொதுத் துறை நிறுவனமான கோவா கப்பல் கட்டும் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கடலோர காவற் படைக்கான ரோந்துக் கப்பலை (OPV - offshore patrol vessel - OPV) அர்ப்பணித்து வைத்தார்.

# சர்வதேசச் செய்திகள்

## பல நாடுகள் கலந்து கொண்ட கோப்ரா கோல்டு இராணுவப் பயிற்சி

❖ தாய்லாந்து நாட்டின் வட தாய் மாகாணத்தில் உள்ள பிட்சனுலுக் பகுதியில் பல நாடுகள் கலந்து கொள்ளும் வருடாந்திர இராணுவப் பயிற்சியான "கோப்ரா கோல்டு" என்ற பயிற்சியை தாய்லாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் தொடங்கின.

❖ இந்தப் பயிற்சியானது இராணுவக் களப் பயிற்சி, மனிதாபிமான உதவிகள் மற்றும் பேரிடர் நிவாரணப் பயிற்சி என்ற 3 பயிற்சிகளைக் கொண்டிருக்கும்.

❖ இது ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் பல நாடுகள் கலந்து கொள்ளும் மிகப்பெரிய இராணுவப் பயிற்சிகளில் ஒன்றாகும். இந்தப் பயிற்சியானது ஒவ்வொரு ஆண்டும் தாய்லாந்தில் நடத்தப்படுகின்றது.

❖ இந்தப் பயிற்சியானது முதன்முறையாக 1982 ஆம் ஆண்டு நடைபெற்றது. இதன் தலைமையிடம் தாய்லாந்தில் உள்ள பேங்காக் ஆகும்.

❖ இந்தப் பயிற்சியானது ஆயுதப் படைகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்திற்கு என்று உருவாக்கப்பட்ட தாய்லாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் முன்னெடுப்பாகும்.

❖ இந்தப் பயிற்சியில் இந்தியா முதன்முறையாக 2016 ஆம் ஆண்டில் கலந்து கொண்டது. இந்தப் பயிற்சியில் சீனா முதன்முறையாக 2015 ஆம் ஆண்டு கலந்து கொண்டது. ஆனால் சீனா மனிதாபிமான உதவிப் பயிற்சியில் மட்டும் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது.

## இராணுவ விண்வெளிப் படை - உருவாக்கம்

❖ அமெரிக்க அதிபர் விண்வெளிக் கொள்கை ஆணை – 4 இல் (SPD 4/ Space Policy Directive 4) கையெழுத்திட்டுள்ளார். மேலும் அவர் அமெரிக்க இராணுவப் படையின் ஆறாவது பிரிவாக விண்வெளிப் படையை உருவாக்க பென்டகனுக்கு உத்தரவிட்டுள்ளார்.

❖ இந்தப் படையானது இராணுவம், கப்பற்படை, விமானப் படை, நீர்மூழ்கிப் படை மற்றும் கடலோரக் காவற் படை ஆகியவற்றுடன் இணைந்து செயல்படும்.

❖ ஆனால் விண்வெளிப் படையினை உருவாக்குவதற்கு அமெரிக்க காங்கிரஸின்


ஒப்புதல் தேவைப்படும்.

- பரிந்துரைக்கப்பட்டுள்ள இந்த விண்வெளிப் படையானது, பின்வருவனவற்றின் மீது கவனத்தைச் செலுத்தும்.
    - தேசியப் பாதுகாப்பு , சர்வதேச தகவல் தொடர்பு , கண்காணிப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்ட செயற்கைக் கோள்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்தல்.
    - விண்வெளியில் சுதந்திரமாக அணுகுதல் மற்றும் சுதந்திரமாக செயல்படுதல் ஆகியவற்றை உறுதி செய்வது, தோழமை மற்றும் கூட்டுப் படைகளுக்கு அவசியமான திறன்களை அளிப்பது.
    - விண்வெளியானது போருக்கான புதிய களமாக இருக்கக் கூடும். ஆதலால் அமெரிக்கா இராணுவ விண்வெளிப் படையை உருவாக்கிப் போரிடும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## 12 பொதுத்துறை வங்கிகள் – மூலதன உட்செலுத்துதல்

- மத்திய நிதித் துறை அமைச்சகமானது 12 பொதுத் துறை வங்கிகளில் ரூ. 48,239 கோடி மதிப்பிலான மூலதன உட்செலுத்துதலை அறிவித்துள்ளது.
- இது ஒழுங்குமுறை மூலதனத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் மிகப்பெரிய அளவில் கடன்களை அளிப்பவர்களுக்குத் தேவையான மூலதன வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் உதவும்.




- உடனடி சரிபார்ப்பு நடவடிக்கைக் கட்டமைப்பில் (Prompt Corrective Action - PCA) ரிசர்வ் வங்கியானது வரம்பு நிர்ணயித்துள்ளதை கருத்தில் கொண்டு இந்த மூலதனம் ஒதுக்கப்பட்டுள்ளது.
- ஜனவரி 31, தேதியன்று இந்திய ரிசர்வ் வங்கியானது பேங்க் ஆப் இந்தியா, மகாராஷ்டிரா வங்கி மற்றும் ஓரியண்டல் வணிக வங்கி ஆகிய வங்கிகளை PCA

கட்டமைப்பிலிருந்து நீக்கியுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## பத்தே நீர்மூழ்கிக் கப்பல்

- ❖ சமீபத்தில் ஈரான் சீர்வேக ஏவுகணைகளை செலுத்தும் திறன் கொண்ட உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நீர்மூழ்கிக் கப்பலை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்த நீர்மூழ்கிக் கப்பலுக்கு பத்தே (வெற்றியாளர்) என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தக் கப்பலில் சீர்வேக ஏவுகணைகளுடன் நீர்மூழ்கிக் குண்டுகள் மற்றும் நீர்மூழ்கி வெடிபொருள் ஆகியவை பொருத்தப்பட்டுள்ளன.



- ❖ இந்தப் புதிய நீர்மூழ்கிக் கப்பலானது ஈரானின் முதலாவது மிதமான கனரக வகையைச் சார்ந்ததாகும்.
- ❖ ஈரான் தற்பொழுது வைத்துள்ள மிதமான எடை கொண்ட காதிர் வகை மற்றும் கனரக கிலோ வகை ஆகியவற்றிற்கிடையேயான இடைவெளியை இது பூர்த்தி செய்யும்.
- ❖ செங்குத்தான செலுத்து அமைப்பின் வகையில் கடந்த 40 ஆண்டுகளில் ஈரான் இராணுவம் மேற்கொண்டுள்ள முக்கியமான திட்டங்களில் இந்தத் திட்டம் மிக இன்றியமையாத ஒன்றாகும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## சரக்குந்துகளுக்கான பசுமை இல்ல வாயு உமிழ்வு - குறைப்பு


- ❖ ஐரோப்பிய ஒன்றியமானது புதிய சரக்குந்துகள் மற்றும் பேருந்துகள் ஆகியவற்றிலிருந்து வெளியேறும் கார்பன் டை-ஆக்ஸைடு உமிழ்வுகளை 2030 ஆம் ஆண்டில் 30 சதவிகிதமாக குறைக்க ஒப்புக் கொண்டுள்ளது.
- ❖ முதன்முறையாக ஐரோப்பிய ஒன்றிய அளவில் சரக்குந்துகளுக்கான கார்பன் டை ஆக்ஸைடு உமிழ்வுக் குறைப்பு இலக்குகளை கண்டிப்பாக நடைமுறைப்படுத்த இந்த

ஒப்பந்தம் பரிந்துரை செய்துள்ளது. மேலும் இந்த ஒப்பந்தமானது சுழிய மற்றும் குறைந்த உமிழ்வு கொண்ட சரக்குந்துகளை ஊக்குவித்தல் ஆகியவற்றையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ஐரோப்பிய ஒன்றியத்தின் போக்குவரத்து தொடர்பான உமிழ்வுகளில் நான்கில் ஒரு பங்கு (1/4) சரக்குந்துகளிலிருந்து வெளிப்படுகின்றது. தற்பொழுது வரை கனரக வாகனங்களிலிருந்து வெளியேறும் உமிழ்வுகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் எந்தக் கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.
- மேலும், மகிழுந்து மற்றும் கூண்டு வண்டிகளிலிருந்து வெளியேறும் உமிழ்வுகளைக் குறைப்பதற்கான இலக்குகளையும் ஐரோப்பிய ஒன்றியம் டிசம்பரில் ஒப்புக் கொண்டுள்ளது.

## காடுகள் மீதான நாசா அறிக்கை

- விரிவான செயற்கைக்கோள் படத்தினை அடிப்படையாகக் கொண்ட நாசாவின் அறிக்கையின்படி, பசுமைத் தாவரங்களின் மிக அதீத வளர்ச்சிக்கு இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் காரணம் என்றும் தெரிய வந்துள்ளது.
- 2000 ஆம் ஆண்டிற்குப் பின்பு, புவியின் பசுமைத் தாவரப் பகுதியானது 5 சதவிகிதம் அல்லது 2 மில்லியன் சதுர மைல்கள் அதிகரித்துள்ளது.





- சர்வதேச அளவில் பசுமைத் தாவரங்களில் மூன்றில் ஒரு பங்கு (1/3) சீனா மற்றும் இந்தியாவில் உள்ளன. ஆனால் இந்த நாடுகள் புவியின் நிலப்பரப்பில் 9 சதவிகிதம் மட்டுமே பசுமைத் தாவரங்களைக் கொண்டுள்ளது.
- சீனா உலக பசுமைத் தாவரப் பரப்பில் 6.6 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது. மேலும் சீனா 42 சதவிகிதம் காடுகளையும் 32 சதவிகிதம் விளைநிலத்தையும் கொண்டுள்ளது.
- 22 சதவிகித விளைநிலங்கள் மற்றும் 4.4 சதவிகித காடுகள் ஆகியவற்றுடன் இந்தியா பசுமைத் தாவரப் பரப்பில் 6.8 சதவிகிதத்தைக் கொண்டுள்ளது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச தாய்மொழி தினம் – பிப்ரவரி 21

- 2000 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி 21 ஆம் தேதி சர்வதேச தாய்மொழி தினம் அனுசரிக்கப்படுகிறது.
- மொழியியல் , கலாச்சாரப் பன்முகத்தன்மை மற்றும் பன்மொழி வழக்கு ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஊக்குவிப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- 1999 ஆம் ஆண்டில் இது குறித்த தீர்மானம் ஐக்கிய நாடுகள் பொதுக் கருத்தரங்கில் யுனெஸ்கோவினால் கொண்டு வரப்பட்டு அது அங்கீகரிக்கப்பட்டது.




- பின்னர் 2002 ஆம் ஆண்டில் இத்தீர்மானமானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் வரவேற்கப்பட்டது.
- இந்த ஆண்டின் சர்வதேசத் தாய்மொழி தினத்திற்கான கருத்துருவானது, “வளர்ச்சி, அமைதி மற்றும் சமரசம் ஆகியவற்றில் உள்ளூர் மொழிகளின் பங்கு” என்பதாகும்.
- இந்த ஆண்டு, இந்தியா மற்றும் வங்க தேசம் ஆகிய இருநாடுகளும் இணைந்து வங்க தேசத்தில் உள்ள பெனபோல் நகரில் சர்வதேச தாய்மொழி தினத்தைக் கெண்டாடவிருக்கின்றன.
- சர்வதேச தாய்மொழி தினத்தைக் கொண்டாடுவதேன்பது வங்கதேசத்தின் முன்னெடுப்பாகும்.
- வங்க மொழியின் அங்கீகாரத்திற்காக வங்கதேசத்தில் அந்நாட்டு மக்கள் போராடியதற்கான நினைவு தினமே பிப்ரவரி 21 ஆகும்.

- - - - - - - - - - - - - - -